<u>முதன்மை சார்பு நீதிமன்றம், செய்யாறு, திருவண்ணாமலை மாவட்டம்</u>

<u>**O.S.No.63/2019**</u>

| | |
|---|---|
| வாதி தரப்பு சாட்சி | .. 1 |
| பெயர் | .. கிருஷ்ணமூர்த்தி |
| தகப்பனார் / கணவர் | .. எத்திராஜிலு நாயுடு |
| வயது | .. |
| தொழில் | .. விவசாயம் |
| கிராமம் | .. காஞ்சிபுரம் |
| தாலுக்கா | .. காஞ்சிபுரம் |

2026 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 10 ஆம் நாள் செவ்வாய்கிழமை திரு.நா.சுரேஷ், எம்.எல்., முதன்மை சார்பு நீதிபதி, செய்யாறு அவர்களின் முன்னிலையில் உரிமையியல் நடைமுறைச்சட்டம் மற்றும் விதிகளின் படி உறுதி செய்யப்படுகிறது.

<u>குறுக்கு விசாரணை:</u>

நான் 10 ம் வகுப்பு வரை படித்துள்ளேன். நான் ஒப்பந்தம் யாரிடம் போட்டேன் என்றால் கன்னப்பன் என்பவரிடம் போட்டேன், அவரை இவ்வழக்கில் சேர்த்துள்ளேன். அவர் இறந்த விவரம் தெரியுமா என்றால் தெரியும். கன்னப்பன் காலமான பிறகு அவருடைய வாரிசுகளை இவ்வழக்கில் சேர்த்துள்ளேன் என்றால் சரிதான். நான் ஒப்பந்தத்தை படித்து பார்த்து தான் பதிவு செய்தேன் என்றால் சரிதான். மேற்படி ஒப்பந்ததத்தின் சாரம்சம் என்ன என்றால் மூன்று மாதத்தில் சொத்தை பதிவு செய்ய வேண்டும். நான் கன்னப்பனிடம் ஒப்பந்தம் போடும் போது அவருக்கு வயது என்ன இருக்கும் என்றால் 70 வயது இருக்கும். மேற்படி மூன்று கால மாதத்திற்கு முடிந்த பிறகு நான் சொத்தை பதிவு செய்து கொள்ள முன்வரவில்லை என்றால் அவர்கள் தான் காலதாமதம் செய்தனர். அதனை எழுத்து பூர்வமாக அவர்களுக்கு தெரிவித்தேனா என்றால் நேரடியாக சொன்னேன், எழுத்து பூர்வமாக தெரிவிக்கவில்லை. எனக்கு ஒப்பந்த போட்ட சொத்தை கன்னப்பன் விற்ற விவரம் எப்போது எனக்கு தெரியும்

என்றால் அவர் விற்ற பிறகு மூன்று மாதம் முன்பு தான் தெரியும், ஆனால் தேதி ஞாபகம் இல்லை. அதன் பிறகு நான் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினேனா என்றால் அனுப்பினேன். நான் வழக்கை எப்போது தாக்கல் செய்தேன் என்றால் மூன்று மாதத்திற்கு உள்ளாகவே வழக்கு தாக்கல் செய்துவிட்டேன். கன்னப்பனிடம் இருந்து கிரையம் வாங்கியவர்கள் தான் 9 ஆண்டுகளாக அனுபவம் செய்து வருகிறார்கள் என்றால் சரிதான். இறந்தபோன 1ம் பிரதிவாதி சேகர் என்பவரிடம் எந்த வித ஒப்பந்தம் போடவில்லை என்றால் சரிதான், அவர் சாட்சி கையொப்பம் போட்டார்.

Taken down before by me in open Court read over / interpreted to the witness and acknowledged by him / her to be correct.

Sd/- N.Suresh
**Principal Subordinate Judge,**
**Cheyyar.**